★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 28 ஷவ்வா 1 இதழ் 151

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12—7—83

## "உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் தாக்கப்படுவதால் சிரமம் அதிகம்!"

### யாழ். அரசாங்க அதிபர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''உதவி அரசாங்க அதிபர் அலுவலகமொன்றைத் தாக்குவதால் அந்த அலுவலகத்தின் மூலம் பயனடையும் ஆயிக்கரணக்கான மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும். குறிப்பாக வறிய மக்களே பெரிதும் பாதிப்பு அடைவர். ஏனெனில் அவர்களின் உணவுமுத்திரை உட்பட அவர்களது அத்தியாவசியமான அரச அலுவல்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகமே மேற்கொள்கிறது''

இவ்வாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும், யாழ்ப்பாண அபிவிருத்தி சபை செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ். தபால் அத்தியட்சகர் அலுவலகம், திருநெல்வேலி உப தபாலகம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியன ஆயுதமேந்திய இளைஞர்களால் செயலிழக்கச் செய்யப்பட்டது குறித்தே இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதா

[6-ம் பக்கம் பார்க்க]

### 4 மணிவரை பஸ் சேவை

(கொழும்பு)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை குறுகிய தூரத்திற்கான பஸ்சேவையை இன்று முதல் மாலை 4 மணிவரை நடாத்தவுள்ளது.

தூர இடங்களுக்கான பஸ் சேவை மாலை 6 மணிவரை நடாத்தப்படும்.

## பேராதனை பல்கலைக் கழகம் மூடப்பட்டது!

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக்கழகம் நேற்று மூடப்பட்டது. பல்கலைக் கழகத்திலிருந்து நேற்று மாலை ஆறுமணி முதல் வெளியேறும்படி சகல பட்டதாரி மாணவர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகம் மூடப்பட்டதை உபவேந்தர் டாக்டர் டாக்டர் வி. எல். பண்டிதரத்ன நேற்றுக்காலை பத்து மணிக்கு அறிவித்தார்.

பல்கலைக் கழகப் பரீட்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதிலும் இப்பரீட்சைகளும் இடைநிறுத்தப்பட்டுப், பின் போடப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும், மறு அறிவித்தல் கிடைக்கும் வரை விரிவுரைகளுக்குத் திரும்ப வேண்டாமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஆறு மாணவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதையடுத்து மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர். கல்கலைக் கழகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அதிகாரிகள் இந் நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

# காந்தீய இயக்கம் தடை?

(நமது வவனியா நிருபர்)

### காந்தீய இயக்கம் தடை செய்யப்படுமா?

கடந்த ஒருமாத காலமாக காந்தீய இயக்கப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதும் அலுவலகம் கூட இயங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அலுவலகம் இயங்க பொலிஸார் தடை விதித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கையிருப்பில் இருக்கும் திரிபோச பால் உணவுப் பொருள்கள் பழுதடையும் நிலைக்கு வந்துள்ளது. வவனியாவிலுள்ள காந்தீய இயக்க அலுவலகத்திலுள்ள பொருட்கள் நொறுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

முக்கிய தஸ்தாவேஜுகள் அலுவலகத்துக்குள் வீசப்பட்டு அலுமாரிகள் கீழே விழுத்தப்பட்டும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

காந்தீய இயக்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு பஸ் தீக்கிரை!

(வவனியா)

கொக்குத் தொடுவாயிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று துப்பாக்கி முனையில் இளைஞர்களால் நேற்று முன்தினம் இரவு முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டது!

முல்லைத்தீவு டிப்போவுக்குச் சொந்தமான இந்த பஸ் கொக்குத் தொடுவாயிலுள்ள பதினைன்காம் மைலில் வந்து கொண்டிருந்தபோது மூன்று இளைஞர்கள் பஸ்ஸை மறித்

[6-ம் பக்கம் பார்க்க]

## வட்டமேசை மாநாடு

(கொழும்பு)

வடபகுதி பயங்கரவாதத்தை அடக்குவது தொடர்பாக வட்டமேசை மாநாடு ஒன்றை கூட்டப்போவதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார். இம் மாநாட்டிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

(6-ம் பக்கம் பார்க்க)

## கடற்படை வீரர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி'

### சுன்னாகத்தில் சம்பவம்

(ஏ. வி. மாணிக்கம்)

சுன்னாகம் மின்சார நிலையப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த கடற்படை வீரர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

கடமை முடிந்து தமது இருப்பிடத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதாகவும், அந்தவெடிச்சத்தம் கேட்ட இடத்தைநோக்கி பலியானவரின் சக கடற்படை வீரர்கள் துப்பாக்கியால்சுட்ட பொழுது தலையில் ஒரு சூடு பட்டு ஸ்தலத்திலேயே ஒருவர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த காமினி நல்லபெருமா (22 வயது) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவராவார். இவர் காலி மாவட்டத்தில் அக்மன என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இம்மாதம் 22ம் திகதி இவருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்ததாம்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

அண்மைக் காலத்தில் வடபகுதியில் இடம்பெறும் சம்பவங்களைத் தொடர்ந்து அரசாங்கத்தின் பிரதான திணைக்களங்கள் சில பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜீப் தீ வைப்பு முயற்சி தோல்வி

]கொழும்பு]

திருகோணமலை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரு ஜீப்புக்கு இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடைந்ததாக அரசாங்க தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-வெ]

## ரமழான் நல்வாழ்த்து!

''ரமழான் எத்தகைய மகத்துவம் வாய்ந்தது என்பது மனிதர்களுக்கு விளங்கிவிடுமாயின் வருடமெல்லாம் ரமழானகவே இருக்கவேண்டும் என்று எனது உம்மத்தினர்விரும்புவார்கள்'' என ரமழானின் சிறப்பு பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்கூறியுள்ளார்கள். இவ்வடிப்படையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு வருடத்திற்கு உரிய நற்செயல்களை எல்லாம் செய்யவும் மேன்மையுறவும் வந்து அமைகின்ற ரமழான் தினத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

(ஆ-ர்)

## உப தபால் நிலையத்தில் தீ

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில் சப்பல் வீதியில் உள்ள உப தபால் நிலையத்துக்குத் தீ வைக்கப்பட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இத்தீ வைப்பினால் சில 'பைல்கள்' எரிந்தபோதிலும் உடனடியாகத் தீ அணைக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் உதவி அரசாங்க அலுவலகம் தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள யாழ். நகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் துப்பாக்கி இளைஞர்கள் தமது கைவரிசையைக் காட்டினார்கள்.

பத்து இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் நேற்று மாலை 3-30 மணியளவில் அலுவலகத்தினுள் நுழைந்தார்கள்! நுழைந்தவர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களை வெளியேற்றிவிட்டு, அங்கிருந்த தொலைபேசிகளையும், தட்டச்சு யந்திரங்களையும் நொறுக்கினார்கள்! அவற்றை நொறுக்கிய கையோடு மேசை கதிரைகளையெல்லாம் உடைத்து நொறுக்கினார்கள்!

வெளியே வந்த அவர்கள் அழகுக்கு வைக்கப்பட்டிருந்

(6-ம் பக்கம், பார்க்க)


## வடமாகாண வர்த்தகப் பிரமுகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

1000 ரூபாவைச் செலுத்தி ஒரு ரெலெக்ஸ் சொந்தக்காரர் ஆகுங்கள்!

யாழ்ப்பாணத்தில் ரெலெக்ஸ் தொடர்பு சேவையில் முன்னோடிகளான

## யூனிவேர்சல் ரெலெக்ஸ்

நிறுவனம் இச்சேவையை வழங்குகின்றது!

வடபகுதிப் பொதுமக்கள் வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர்களுடனோ நண்பர்களுடனோ தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கு எமது சேவையை நாடுங்கள்

சர்வதேச நேரடி தொலைபேசியும் ரெலெக்ஸ் தொடர்பு சாதனமும் எங்களிடம் இருக்கின்றன!

எந்நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்!

யூனிவேர்சல் ரெலெக்ஸ்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23006 — 23100 ரெலெக்ஸ்: 22136 UNITELCE

(7951)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு புது யன்னல், பாவித்த இரண்டு நிலை கதவு, நல்லநிலையில் உள்ள பழைய தீராந்திகள், பனை மரம், பாவித்த நல்ல மர ஏணிப்படி விற்பனைக்கு இருக்கிறது. விபரம்:- 3/9, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். 7933

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளது மான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

கொழும்புத்துறையில் ஆனந்தன்வடலி வீதி முதலாம் ஒழுங்கையில் ஆனந்தன்வடலி வீதியிலிருந்து 25 அடி தூரத்தில் வீடு கட்டக்கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்து விற்கப்படும். விபரங்களுக்கு:- புதிய இல: 178, சிவன்பண்ணை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 7876

யாழ்ப்பாணம் அராலிவீதி மாநகரசபை எல்லைக்குள் வீடும் கடையும் 1½ பரப்பு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வீனஸ் 266/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7902

புதிய N.V·777 நஷனல் வீடியோ டெக்கும் Technics Stero- Tape Deck Equalizer உடன் விற்பனைக்குண்டு. கந்தையா நடனபாதம், பூதர் மட ஒழுங்கை, நீர்வேலி தெற்கு. 7939

நல்ல நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கும் பெரிய எலக்ரோலக்ஸ் (Elecrolux) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கிருக்கின்றது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:7944, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7944

## வகுப்புகள்

Builders Quantitites Part 1 and 11,City and Guilds London May/June 1984 பரீட்சைக்கான/ மாலைநேர வகுப்புகள் ஆரம்பம்: 15-7-83 Keen Institute. (மணியம்ஸ் கட்டிடம்), ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (7888)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 274ம் இலக்கத்தில் உள்ள சி. எஸ். கே. கட்டடத்தில் (C.S.K.) உள்ள புதிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு:- முகாமையாளர் சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7943

இலக்கம் 133, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாகக்கட்டப்பட்டிருக்கும் / கட்டப்படவிருக்கும் கடைகள் வாடகைக்குத் தேவைப்படுவோர் உடனடியாகப் பதிவு பதிவுசெய்து கொள்ளவும். விபரங்களுக்குமுகாமையாளர், சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7942

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

மரண சாதனமின்றி மரணம் எய்திய, யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, 97/2ம் இலக்கத்தைச் சேர்ந்த சரவணமுத்து வடிவேல்.

மரணமெய்தியவர்.

மரண சாதனம்
நியாயாதிக்கம்
இல. தத்து/3729

சரவணமுத்து வடிவேல் கைம்பெண் தவமணி, இல. 97/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் ஆதனத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1983ம் ஆண்டு ஆடி மாதம் 15ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983ம் ஆண்டு வைகாசி மாதம் 24ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

தா. குலஞானம்,
பதிவாளர்.

த. சோமசுந்தரம்,
93/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
மனுதாரின் சட்டத்தரணி.
7930

## தேவை

யாழ்ப்பாணம் ரோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில்வரவும். 7940

கிளிநொச்சி, பிரதான வீதியிலுள்ள ''சிவாஸ் இன்டஸ்றீஸ்'' தையல் நிலையத்துக்கு தையல் கட்டிங்இல், நல்ல திறமையும், அனுபவமுமுள்ள பெண் தேவை. நேரில் தொடர்பு கொள்பவர்கள் கிளிநொச்சி, கண்டிவீதி, ''சிவாஸ் கபே''க்கு வரவும். 7941

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்திற்கு ஆங்கிலம் பேச எழுதத்தெரிந்த பணிப்பெண் தேவை. நேரில் சிங்கன் என்பவரை 09-07-83 லிருந்து 12-07-83 வரையில் திருமதி பூமாதேவி நடராஜா, டச்சுரோட், தொல்புரம் என்ற முகவரியில் வந்து பார்க்கவும். 7922

## விற்பனைக்கு

12—15 அடி உயர புதிய குரோமியம் முலாம் பூசப்பட்ட கொடிஸ்தம்பம் 12—35—45 கிலோ எடையுள்ள ஆலய மணிகள் விற்பனைக்கு உண்டு.

பூரண விளைத்திறனுடைய பூனகிப்புரக பம்பாய் வெங்காய விதைகள் விற்பனைக்கு உண்டு.

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**

251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(7860)

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் திருக்குடமுழுக்கு (மகாகும்பாபிஷேகம்)பற்றிய அறிவித்தல்

கோவிலின் நித்திய பூசகர்கள் அறங்காவலர் சபைக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள வழக்குக் காரணமாக

**14-7-1983 - ல் நடைபெறவிருந்த மேற்படி கும்பாபிஷேகம் 28-8-1983 ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

குறிப்பு: கும்பாபிஷேகம் தொடர்பான யந்திர பூஜைகள் 11-7-83 திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும். கர்மாரம்பம் 19-8-83 வெள்ளிக்கிழமையும், யாகாரம்பம் 24-8-83 புதன்கிழமையும், பிம்பஸ்தாபனம் 26-8-83 வெள்ளிக்கிழமையும் நடைபெறும். மகாகும்பாபிஷேகம் 28-8-83 காலை 6-05 தொடக்கம் 7-15 வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

அறங்காவலர் சபை

7936

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைக்கு பெஸ்டஸ் பாராட்டு

(பண்டத்தரிப்பு)

மடுமாதா ஆலயத்தில் கடந்த ஜூலை மாத உற்சவ காலத்தின்போது அங்கு திரண்டிருந்த சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்களின் நலன்கருதி முதலுதவிச் சிகிச்சை முகாம் மூலம் சிறந்த சேவைகளை ஆற்றிய செல். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கு கடற்றொழில்அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் 15 முதலுதவியாளர்களைக் கொண்ட குழுவினர் ஆலய உற்சவ காலத்தில் பொலிசாருக்கு உதவியாக வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய கடமைகளையும் மேற்கொண்டிருந்தனர். இவர்களின் பணிகளை நேரடியாக அவதானித்த அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி அவர்களின் மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் சிறந்தமுறையில் சேவையாற்றியது குறித்து அங்குள்ள குறிப்பேட்டில் தமது பாராட்டுதல்களை தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட நீதிபதி திரு. உடலகம, அரசாங்க அதிபர் திரு. ஜெக செந்தில்நாதன் வவனியா சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் கே. கனகசபை, மன்னார் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பி. இராசேஸ்வரன், மன்னார் பேராயர் அதி வந். தோமஸ் சௌந்தரநாயகம், மற்றும் மடுமாதா ஆலய பரிபாலகர் அருட் திரு. தேவராஜன் அடிகளார் ஆகியோரும் இப்படையினரின் சேவையைப் பெரிதும் பாராட்டி குறிப்பேட்டில் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (கி)

## மாஸ்கோவில் 'ஏழாவது மனிதன்' தமிழ்ப்படம்

மாஸ்கோ ஜூலை 11

மாஸ்கோவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் 'ஏழாவது மனிதன்' எனும் தமிழ்த்திரைப்படம் கடந்த வெள்ளிக் கிழமை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு வந்திருந்த சோவியத் மற்றும் வெளிநாட்டுப்பிரதி நிதிகளுக்கு இப்படத்தின் இயக்குநர் திரு ஹரிகரனை இந்திய தகவல்துறை அமைச்சர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

'ஏழாவது மனிதன்' திரைப்படம் தொழிலாளர்பிரச்னையை மையமாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## பழைய மாணவர் சங்க நிர்வாகிகள்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவராக திரு. கே. முத்துவேற்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு.எம். கிரிதரன் செயலாளராகவும், பொருளாளராக திரு. வி. இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். 18 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. 5 லட்சம் ரூபாய் செலவில் கல்லூரிக்கு ஒரு கட்டடத்தை பழைய மாணவர் நிறுவிக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

## கரவெட்டி பஸ்பிரயாணிகள் சங்கம்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பஸ் பிரயாணிகளின் நலன் கருதி பஸ் பிரயாணிகள் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் உதவியுடன் அடுத்த மாதம் 27ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள இச்சங்கத்தில் சேர விரும்புவோர், யாழ். இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த துன்னாலை வடக்கு திரு.வி. சிவசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# டாக்டரின் மனிதாபிமான உணர்வுஏற்படுத்திய தாமதம்

(மன்னார்)

ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவதற்காக மாவட்ட வைத்திய அதிகாரி சென்றதால் தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாகத் தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்த பிரயாணிகள் 3 மணித்தியாலம் கப்பலைவிட்டு இறங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

தலைமன்னார் துறைமுகத்தை நோக்கி வந்துகொண்டிருந்த கப்பல் பிரயாணிகளைப் பரிசோதிப்பதற்காக மாவட்ட வைத்திய அதிகாரி காத்திருந்தார். அச்சமயம் கிருமிநாசினி அருந்திய பெண்ணொருவர் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதாக மாவட்ட வைத்திய அதிகாரிக்குத் தகவல் கிடைத்தது. இத் தகவலையடுத்துக் கிருமிநாசினி அருந்திய பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவதற்காக மாவட்ட வைத்திய அதிகாரி மன்னார் அரசினர் வைத்திய சாலைக்குச் சென்று பிரஸ்தாப பெண்ணின் உயிரைக் காப்பாற்றினார்.

இதனாலேயே கப்பல் மார்க்கமாகத் தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்த பிரயாணிகள் கப்பலைவிட்டு இறங்குவதற்கு 3 மணி நேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் எதிரொலியாகப் பல கப்பற் பிரயாணிகள் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயிலில் பிரயாணம் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டது. (அ-கி)

## லொறி தீக்கிரை

(மட்டக்களப்பு)

கல்முனையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான லொறியொன்று இனந்தெரியாத சில இளைஞர்களால் தீ வைக்கப்பட்டது.

கல்முனை இ. போ. ச டிப்போவுக்குச் சமீபத்தில் இந்த லொறி நிறுத்தப்பட்டிருந்தது. இளைஞர்கள் துப்பாக்கி முனையில் காவலாளியை எச்சரித்துவிட்டு லொறிக்குத் தீவைத்ததாகக் கூறப்பட்டது. (க)

## மலையக மக்களை வெளியேற்றுவதற்கு கண்டனம்!

(கிளிநொச்சி)

வவனியாவில் குடியேறியுள்ள மலையகக் குடும்பங்களை வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கிளிநொச்சி பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் பிரஸ்தாப சங்கத் தலைவர் பா. கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளரான சண். சுப்பிரமணியம் இக்கூட்டத்தில் பேசுகையில், தமது உடைமைகளை இழந்து நிர்க்கதியான நிலையில் மலையகத்தைவிட்டு வெளியேறி வடக்குக் கிழக்குத் தமிழ் மண்ணில் வந்து குடியேறிய மலையக மக்களை இம்மண்ணிலிருந்து வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கை அநீதியானதென்றும், அரசின் எந்தவித உதவியும் இன்றித் தமது சுய முயற்சியால் காடுகளை அழித்துக் குடியேறிய மக்களைத் துன்புறுத்துவது நீதிக்கு முரணானது என்றும் கூறினார். (கி)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு கிராம அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றபோது கீழ் காணுவோர் புது வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: திருவாளர்கள் வ. ந. நவரத்தினம் பா. உ, க. துரைராசா, வே. மார்கண்டு. தலைவர் திரு. இ. வேலாயுதர். உபதலைவர்கள் திருவாளர்கள் செ. கார்த்திகேசர், வ. வேலுப்பிள்ளை ஜே. பி, ச. கனகன் செயலாளர் திரு. அ.சந்திரசேகரம். உபசெயலாளர் திரு. சி. செல்வநாயகம் பொருளாளர் திரு. கனகரத்தினம்.

நிருவாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் இ. புவனேஸ்வரன், த. செல்லத்துரை ஐ. வாரி, க. கொத்தன், சி. இராமலிங்கம், மு. துரையப்பா, சி. சுப்பிரமணியம், நா. மாணிக்கன், தி. முருகேசு இ.கிருஷ்ணராசா, ச.வெள்ளையன், சி.பூபாலசிங்கம். (க)

**மணிவாக்கு**

இறைவனின் உண்மையில் எனக்குள்ள உறுதியானது இமயமலையைப் போல அசைக்கமுடியாததாகவும், அதன் கொடுமுடிகளில் உள்ள பனிப்படலங்களைப் போலத் தூயதாய்த் தெளிவாகவும் உள்ளது.

— மகாத்மாகாந்தி.

# நமது நோக்கு

## மனப்பால் குடிக்காதீர்!

இராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சௌமியமூர்த்தி திரு. தொண்டமானின் நிர்வாகத் திறமையாலும் ஆண்டவன் கிருபையாலும் மக்களுக்கு சுத்த பசுப்பால் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

அந்த நல்ல பலன், இன்று பல முக்கிய இடங்களில் பெருகிவரும் மனப்பாலினால் நிராகரிக்கப்பட்டுவருகிறது.

கலப்படப் பாலிலும் மிக அபாயமானது மனப்பால். பால்காரி ஒருத்தி தலையிலே பாற்குடம் வைத்துக்கொண்டு தான் பணக்காரியாய் வந்ததும் அரசிளங்குமரனுடன் நடனமாடுவேனென்று பாசாங்குசெய்ய குடம் உடைந்ததும் மனப்பால் அகன்றதும் ஒரு பண்டைய கதை.

இன்றும் என்றும் மனப்பால் தனிமனிதனை மட்டுமல்ல ஒரு நாட்டின் ஆட்சிக்கே ஆட்டம் ஏற்படுத்த முடிவதை நாம் காணமுடிகிறது.

பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி போன்ற பொதுஜன தொடர்பு சாதனங்களும் ஆட்சிக்காதரவான சக்திகளும் அரசுடன் சேர்ந்துபாடும் ராகமே 'பயங்கரவாதம்'

இன்று இது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான தன்மைபோல் எவ்வித தெளிவான கருத்தையும் குறிக்கும் ஆற்றல் அற்ற பதமாய் விட்டது.

திருகோணமலையின் ரகசியம் சாதாரணமக்கள் நம்புமளவிற்கு வெளிவந்திருக்கிறது. தமிழ்ப்பிரச்னைகளுக்கு மாறான பத்திரிகைகளே தம் சுருதியை மாற்றத் தொடங்கி விட்டன.

திருகோணமலை எரியும் போது அரசு நீரோமன்னன் போல் வீணை வாசித்ததென்றுகூட எழுதத் தொடங்கப்கிவிட்டன.

ராகமாற்றம், தாளமாற்றம் - இவற்றின் காரணம் அப்பாவிமக்கள் உடனடியாகப் புரியக்கூடியதல்ல.

திருகோணமலைத்தமிழ்மக்கள் மிகநல்லவர்கள், வடபகுதிப் புலிப்படையினரின் தாக்கத்துக்குப்பலியாகாதவர்கள்அங்குள்ளசிங்கள மக்களுடன் நல்லுறவு வாழ்வு விரும்புகிறவர்கள் இவர்கள் சிங்கள மக்களின் வன்செயல்களுக்காளானதை அரசு உடனடி நடவடிக்கை எடுக்காமற் பார்த்திருந்தது பெரும் தவறு என்ற பிரசாரமே அழிவுக்குப்பின் நிகழ்ந்த பிரசவம்.

நாடெங்கும் அமைதி வாழ்வு; திருகோணமலையில் நிகழ்ந்த கொடுமைகள் எக்காலத்திலும் மீண்டும் நிகழாதிருக்கவேண்டும்; எஞ்சியது யாழ். மாவட்டமே! இங்கு துள்ளிஆடும் வன்முறை இயக்கமே நாட்டுக்கு ஒரேஒரு சவால்! என்ற பிரசாரம் இன்றுதீவிரமாகிறது.

அது மட்டுமல்ல; தமிழர் சமாதானவாழ்வை விரும்புபவர்கள்; ஒருசிலரால் தொடக்கப்பட்ட இந்த இயக்கம், அப்பாவி மக்களுக்கு பெரும் துன்பங்களை நிகழ்த்திவருகின்றன; அது எவ்வாறாயினும் நாம் யாழ்ப்பாணத்துக்கு அவசியமான பொருட்களை எவ்வகையிலும் அனுப்பி உதவுவோமென்கிறார் வர்த்தகம், கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி.

நல்லெண்ணத்துடன் இவ்வித தேற்றமளிக்கும் அமைச்சர் உண்மையில் இங்குவாழும் பொதுமக்கள் ஆட்சிக்கு ஆதரவாக, தமிழர்விடுதலை இயக்கத்துக்கு மாறாக விருக்கிறார்களென நம்புகிறாரா?

எவ்வகையிலும் இராணுவத்தினால், அல்லது அரச தந்திரத்தால், அல்லது இரண்டினாலும் இன்றைய பயங்கரவாத நிலையை முறியடித்துவிட்டால் மக்கள் அரசின் சமாதான திட்டங்களுக்குத் தலையாட்டுவார்களென்பதே நாம் குறிப்பிடும் மனப்பால்.

தெரிந்தும், தெரியாத வகையில் வெளிப்படும் கருத்துக்கள் எல்லாம் ஏன் இந்த நிலை யாழ்ப்பாணத்தில் உருவானதென்பதை மறைத்தும் மறுத்தும் விடுகின்றன.

25 ஆண்டு காலம் இங்கு நடைபெற்ற கொடுமைகளும் அநீதிகளும் இங்கு உருவான விடுதலை இயக்கம் அதே நிலையில் பல ஏமாற்றங்கள் காரணமாக, அமைதிப் போராட்டத்தில் தொடர முடியவில்லையென்பதும் வெளிப்படை.

அந்த நிலையில் அரும்பிய வன்முறைக் கூட்டம், அதன் விளைவுகளால் இன்னொரு வன்முறை இயக்கமாக வளர்ந்துவிட்டது.

இதனை விரும்பாத எந்தத் தமிழனும், இதனை முறியடித்துவிட்டால் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை இழந்து பிறந்த நாட்டில் எந்நேரமும் அகதிகளாகும் நிலைக்கு ஒருப்படுவனென்று நினைப்பது மனப்பால்-

நாட்டில் அமைதி நிலவுவதற்கு யாழ்ப்பாணம் மட்டுமே தடையென்பது மனப்பால்.

நிம்மதி வாழ்வுக்கு மனப்பால் உதவுமா?

# 'மழையும்பெய்ய மறுக்கிறது;

## மகாவலியும் இங்கு வர மறுக்கிறது

### இந்த உண்மையை ஜனாதிபதி உணர மறுக்கிறார்'' என்கிறார் வவனியா 'சிவா'

(வவனியா)

''கிழக்கு மாகாணத்தின் எல்லைக்குள் பாரிய வளமுள்ள நிலப்பரப்பில் அரசு தாம் விரும்புகின்றவர்களை குடியேற்றுவதற்காக மாதுருஓயா திட்டத்தை துரிதமாக உருவாக்கப்படுகின்றது. இந்த உண்மையை கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் நன்கு அறிவார்கள். கல்லோயாதிட்டத்தினால் நிகழ்ந்த விளைவுகள் எமக்கு நல்லபாடத்தினை புகட்டியுள்ளது'' என்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கோவில்குளம் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார். திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

''மகாவலி திட்டத்தின் ஒரு அங்கமான மாதுருஓயா திட்டம் நிறைவுபடுத்தப்பட்டு கோலாகலமாக திறப்புவிழா ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

''அடுத்த தினம் நிக்கரவெட்டியாவில் நடைபெற்ற கம்முதாவ விழாவில் பேசிய ஜனாதிபதி அவர்கள், மழையையும் நதிகளையும் உதாரணம்காட்டி அபிவிருத்தி திசையில் எந்த அளவும் பாகுபாடு அற்றமுறை இந்த நாட்டில் அபிவிருத்தி நடைபெற்றுவருவதை குறிப்பிட்டுள்ளார்.

''உருவாக்கப்பட்டுள்ள மாதிரி கிராமம், வீடமைப்புத் திட்டங்கள் வட-கிழக்கு பகுதிகளில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதை தவிர்ந்த எஞ்சிய மாவட்டங்களில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற புள்ளி விபரத்தினை மக்களுக்கு தெரிவித்தால் பாகுபாடு எவ்வளவு தூரம் அமுல்படுத்தப்படுகின்றது என்பது தெரியவரும்.

''மகாவலி திட்டம் உருவாக்க பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோது மகாவலி நீர் முதலில் வரண்டபிரதேசங்களுக்கு கொண்டுவரவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

''உலக ஸ்தாபனங்களும் இதனை ஏற்றது இன்று வட மாகாணம் போன்ற வரண்ட பிரதேசங்களுக்கு மகாவலிநீர் கொண்டுவரப்பட்ட திட்டம் முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரத்துடன் மகாவலி நிற்கின்றது. அங்குள்ள நெல்வயல்கள் இருபோகம் செய்வதற்கு நீர்வசதி செய்யப்படுகின்றது. எமது பிரதேசங்களை பொறுத்தவரை மாரி போகத்தை செய்வதற்குகூட நீர் இல்லாது இலட்சக்கணக்கான விவசாயிகள் தொடர்ச்சியாக வரட்சியினால் வாழவழியின்றி இக்கட்டானநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மழையும்பெய்ய மறுக்கின்றது. மகாவலியும் வரமறுக்கின்றது. மழைகளையும், நதிகளையும் உதாரணம் காட்டி பேசிய ஜனாதிபதி இந்த உண்மையை உணரமறுக்கின்றார்''

## ஆஸ்திரேலிய தூதருக்கு வரவேற்பு !

(கிளிநொச்சி)

இலங்கைக்கான அவுஸ்திரேலியா தூதுவர் திரு. டேவிட் றட்டர் கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்குவருகைதந்தார். இவருக்கும் இவரது பரிவாரத்தினருக்கும் பிரஸ்தாப ஆஸ்பத்திரி அபிவிருத்திசபையினர் அதன் தலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி தலைமையில் சிறந்த வரவேற்பொன்றை அளித்தனர்.

இவ்வைபவத்தில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி என். கந்தசாமி, கமநல சேவைத் தலைவரும் ஆஸ்பத்திரிச்சபை பொருளாளருமான கே. பாக்கியநேசர், பிரதேச சபைத்தலைவர் என். சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டனர். ஆஸ்பத்திரியின் தேவைகளடங்கிய மகஜர் ஒன்றை ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபையின் இணைச்செயலாளர் டாக்டர் எம். யோகீஸ்வரதேவன் அவுஸ்திரேலியத்தூதுவர் டேவிட் றட்டரிடம் கையளித்தார்.

ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் கே. வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற வரவேற்புவைபவத்தில் தூதுவர் டேவிட் றட்டர் பேசுகையில்: கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் தேவைகளை தான் அனுதாபத்துடன் நோக்குவதாகவும் இவற்றை நிறைவேற்ற றோட்டறிக்கழகம் லயன்ஸ் கழகம் போன்ற சமூகசேவைக்கழகங்களின் உதவியையும் பெற வேண்டுமெனவும் தன்னாலான உதவிகளையும் வழங்க பின்நிற்கப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார். (கி)

## பரந்தன் றோட்டரிக்கழக சேவைக்கு எம்.பி. பாராட்டு

(கிளிநொச்சி)

''அரசியல்வாதிகளான எங்களால் செய்யமுடியாத பல பணிகளைக் கிளிநொச்சி-பரந்தன் றோட்டறிக் கழகம் செய்துள்ளது. கூடுதலான தொகையினருக்கு இலவச கண் சிகிச்சையையும் அளித்த பெருமையும் இக்கழகத்திற்கே சாரும். இக்கழகத்தினரின் சேவைகளை மனதாரப் பாராட்டுகிறேன்''.

இவ்வாறு கிளிநொச்சி - பரந்தன் றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவர், செயலாளர் பதவியேற்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி எம். பி. வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

பரந்தனிலுள்ள கழக அலுவலகத்தில் முன்னாள் தலைவர் ஆ. குலசேகரம்பிள்ளை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. புதிய தலைவராக டாக்டர் என். சிறிதரனும், செயலாளராக கவிஞர் ப. வை. ஜெயபாலனும் பதவியேற்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சபை உறுப்பினர் இ. கிருஷ்ணராசா, உதவி அரசாங்க அதிபர் கே.சுப்பிரமணியம்,பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் சட்டத்தரணி எஸ். அம்பிகைபாலன் பேசுகையில்: றோட்டறிக் கழகம், லயன்ஸ் கழகம் போன்ற சமூகசேவை இயக்கங்கள் சமுதாயத்திற்கு பெரும்தொண்டாற்றி வருகின்றன. நலிவுற்ற மக்களின் நல்வாழ்வே எமது இலட்சியம்.

பரந்தன் கிளிநொச்சி றோட்டறிக்கழகத்தினர் கிளிநொச்சி பகுதிக்கு பெரும் சேவையாற்றி வருவது பாராட்டிற்குரியது என்றார். இக்கழக செயலாளர் ப. வை. ஜெயபாலன் முன்னாள் தலைவர் ஆ. குலசேகரம்பிள்ளை தலைவர் டாக்டர் என்.சிறிதரன், ஓய்வுபெற்றதபால் அதிபர் திரு. செல்லையா, ஆசிரியர் றோட்டறியன் ம.பத்மநாதன் கல்லூரி அதிபர் திரு. திரு. தர்மரெத்தினம், சமூகசேவைப்பிரிவு றோட்டறியன் மூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்கள்.

## லண்டன் துப்பாக்கிக் கொள்ளைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம்உண்டா?

(கொழும்பு)

தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், லண்டனிலுள்ள துப்பாக்கி விற்பனை நிலையத்தில் நடந்த கொள்ளைக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதுபற்றி இரகசியப்பொலிஸார் தீவிரவிசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

**கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைதான பயங்கவாதி ஒருவரிடம், லண்டனில் துப்பாக்கி விற்பனை நிலையக் கொள்ளைதொடர்பான கடிதமொன்று கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இரகசியப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்**'

பயங்கரவாதியிடம் கைப்பற்றப்பட்டது, ஒரு அநாமதேயக் கடிதமென்றும், அக்கடிதத்தில், பெயர் விலாசம் எதுவுமே இருக்கவில்லையென்றும், கடித உறைகாணாமல் போயிருப்பதாகவும், இரகசிய பொலிஸார் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கடிதத்தில் ''எவ்வளவு துப்பாக்கிகள் தேவைப்படுகிறது'' என்றும், லண்டனிலுள்ள துப்பாக்கி நிலையம் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதாகவும், கூறப்பட்டிருந்ததாகவும் இரகசிய பொலிசார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக இக்கடிதத்தை கொண்டு வந்த தீவிரவாதி பற்றிய விபரங்களை வெளியிட பொலிசார் மறுத்துவிட்டனர். (க)

### யாழ். பல்கலைக்கழக

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒத்திப்போடப்பட்ட கலைப்பீடப்பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கலைப்பீடம் முதலாம் ஆண்டு பரீட்சைகள் இம் மாதம் 18-ம் திகதி ஆரம்பமாகும். பொதுப் பட்டத்துக்கான பரீட்சையின் முதல்பாகம் இம் மாதம் 25-ம் திகதியும் இரண்டாம் பாகம் அடுத்தமாதம் 4-ம் திகதியும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிறப்புப்பட்டத்திக்கான பரீட்சையின் முதல்பாகம் இம்மாதம் 25-ம் திகதியும் இரண்டாம் பாகம் அடுத்த மாதம் 4-ம் திகதியும் 3ம் பாகம் அடுத்த மாதம் 17ம் திகதியும் ஆரம்பமாகும்.

விஞ்ஞான பீடத்துக்கான பரீட்சைகள், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறும்.

## மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

வண்: நாவலர் மகாவித்தியாலயத்தில் நாளை புதன் கிழமை காலை மணிவாசகர் விழா நடைபெறவுள்ளது.

பிரதமகல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புலவர் ம. பார்வதிநாதசிவம் விசேஷ உரையாற்றுவார். வட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தம் அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவர். திரு. வே. சிவஞானம் பண்ணிசை ஓதுவார். பண்ணிசைப் போட்டியும் இடம்பெறும். பிரதம கல்வியதிகாரி பரிசில்களை வழங்குவார். (அ)

# "இந்திய இராணுவம் பூரணஉஷார் நிலையில் இருக்க வேண்டும்!"

## தளபதிகளிடம் அமைச்சர் வெங்கட்

புதுடில்லி, ஜூலை 11

''எந்த ஒரு அந்நியத் தாக்குதலையும் எதிர்நோக்கும்வகையில் இந்திய இராணுவம் பூரண தயார்நிலையில் இருக்க வேண்டும்'' என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் திரு. வெங்கட்ராமன் இந்தியாவின் தெற்குப் பிராந்திய இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட மகாநாடொன்றில் நேற்றுப் பங்குபற்றினார். அம் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தமது உரையில் தெரிவித்ததாவது: ''நாளுக்கு நாள் சர்வதேச நிலைமை அபாயகரமானதாக மாறிவருகின்றது. இதனால் எந்நேரத்திலும் படையெடுப்புகளும், முற்றுகைகளும் தோன்றலாம். ஆகையினால் இந்திய இராணுவமும் எத்தகைய இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளுக்கும் ஈடுகொடுக்கும்விதத்தில் பூரண உஷார்நிலையில் இருக்கவேண்டும்.

இந்திய இராணுவத்தின் நிலையை அரசாங்கம் இடைவிடாது கண்காணித்துவருகின்றது. எத்தகைய இராணுவத் தாக்குதல்களையும் எதிர்நோக்கும் மேம்பட்ட போரிடும் ஆற்றல் எமது இராணுவத்திடம் இருப்பதையும் உணர்த்த வேண்டும்.

இந்தியா சமாதானத்தை விரும்பும் ஒரு நாடு. அணிசேரா இயக்கத்தின் தலைமை நாடாக உள்ளது. எத்தகைய சூழ்நிலையிலும் இராணுவ நடவடிக்கைகளில் முதலில் இறங்குவதை இந்தியா ஆதரிக்கவில்லை. உலக சமாதானத்தை எட்டவே அது தொடர்ந்து பாடுபடுகின்றது'' என்றார். (கி)

## புகைத்தலைத் தவிர்க்க 3 தினங்கள்!

டோக்கியோ, ஜூலை 11

தென்மேற்கு ஜப்பானில் உள்ள வாகி என்ற சிறிய நகரில் புகைபிடித்தலைத் தடுக்க புதியமுறை கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

இந் நகரில் ஒவ்வொரு மாதமும் 7ம், 17ம், 27ம் திகதிகளை 'புகைத்தலைத் தவிர்க்கும் தினங்கள்' எனப் பிரகடனப் படுத்தியுள்ளார்கள்.

7500 மக்களைக் கொண்ட இந்நகரில் உள்ளவர்களை மேற்குறிப்பிட்ட தினங்களில் சட்டரீதியாக புகைத்தலிலிருந்தும் தடைசெய்வதாக இப் பிரகடனம் அமையவில்லை. மாறாக இப் பிரகடனத்தின்மூலம் இந்நகர மக்களிடையே புகைபிடிக்கும் பழக்கத்தை படிப்படியாகக் குறைத்து அவர்களை வீண் செலவினங்களுக்கு உட்படாமல் இருக்கச்செய்வதே முக்கிய நோக்கமாகும்'' என்று இந்நகர பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (கி)


வாடிக்கையாளர் அனைவருக்கும்

எமது ரம்ழான் வாழ்த்துக்கள்

சலாம்ஸ்
SALAAMS

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான உங்கள் பொருட்களை பாதுகாப்பாக ஏற்றி இறக்குபவர்கள்.

95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் போன்: 23697

65, டாம் வீதி, கொழும்பு - 12, போன்: 35509

அனைவருக்கும் இனிய
ரம்ழான் வாழ்த்துக்கள்

மாற்றுக்குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவல்லர்ஸ்
கண்ணைக் கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவல்லர்ஸ்
நவீன டிசைன்களைத்தருவதில் முன்னணி வகிப்பவர்கள் ஜப்பான் ஜுவல்லர்ஸ்
மூன்று தலைமுறையாக சேவையாற்றி வருபவர்கள் ஜப்பான் ஜுவல்லர்ஸ்

ஜப்பான் ஜுவல்லர்ஸ்
64, கன்னதிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 22585

அனைவருக்கும் இனிய
ரம்ழான் வாழ்த்துக்கள்
அழகிய
பவுண்நகைகள் தங்கப்பவுண் வைரங்களுக்கு

கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்
கன்னதிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 22585


## நேபாள அமைச்சர்கள் ராஜினாமா!

### பிரதமர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை!

காட்மண்டு, ஜூலை 11

நேபாள அமைச்சரவையில் இருந்து நிதி, வெளிவிவகார அமைச்சர்கள் உட்பட மேலும் பதினொன்கு அமைச்சர்கள் நேற்று ராஜினாமாச் செய்தனர். இவர்களுக்கு முன்னர் சுமார் 11 பேர் ராஜினாமாச் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அமைச்சர்கள் ராஜினாமாச் செய்துள்ளதையடுத்து முப்பத்தைந்தாக இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை பத்தாக குறைவடைந்துள்ளது. இந்த நேபாள அமைச்சரவை இரண்டு வருடங்கள் மட்டுமே பதவிவகித்துள்ளது.

நேபாள பிரதமமந்திரி திரு. சூரியபகதூர்தாப்பாவுடன் கொண்டுள்ள கருத்துவேறுபாடுகளே, அமைச்சர்களை ராஜினாமாச்செய்யத் தூண்டியுள்ளன. பிரதமர் சூரியபகதூர் தற்போது நேபாளத்தில் நிலவிவரும் பொருளாதாரச் சிக்கல்களை சமாளிக்கக்முடியாதவராக இருக்கிறார் என்றும், இங்கு ஊழல், லஞ்சம் ஆகியன மலிந்துள்ளபோதும் அவற்றை நீக்கும் வல்லமையற்றுள்ளாரென்றும் ராஜிமாச்செய்த அமைச்சர்கள் அவர் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பிரதமமந்திரி கருத்துவேற்றுமை கொண்டுள்ள அமைச்சர்கள் தமக்கெதிராக கொண்டுவரும் நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்றை இன்று எதிர்நோக்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரதமருக்குப் பெரும்பாலும் பாதகமாகவே அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

## இன்றைய பலன்

ஆனி 28ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(12—7—83)

மேடம்: இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் சிலருக்கு வெளியூர்ப் பயணமும் மேற்கொள்ளப்படலாம் தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும்,

இடபம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும் விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம் எதிர்பாராத பணமும் கைக்குக் கிடைக்கும் பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள்,

மிதுனம்: தனியார் துறையில் நஷ்டம் மேற்படுவதற்கு இடமுண்டு கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டைகள் மூளமுடியும் உளவு வேலையில் இறங்கக்கூடும் தெய்வ நம்பிக்கை வேண்டும்.

கடகம்: நான் ஙீடிம அகம் பாவம் தலைதூக்கும் வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும் எதற்கும் அவதானம் வேண்டும்.

சிங்கம்: நிதியில் அபிவிருத்தி தென்படுகிறது பூர்வீகச்சொத்தொன்று உமக்குக் கிடைக்கலாம் மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர் பிறருடைய வாழ்க்கையில் முன் நிற்பீர்கள்.

கன்னி: பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள் இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும் மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

துலாம்: அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும் ஆக்கப் பணியில் ஆர்வம் பிறக்கும் இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னான தினம் வாகன விருத்தியும் உண்டு.

விருச்சிகம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு பிள்ளைகளின் கல்விமுன்னேற்றமுண்டு.

தனு: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும் போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் திடீர்த் திருப்பம் உங்களை திகைக்க வைக்கலாம்.

மகரம்: காதல் விவகாரங்களில் இன்று பொழுதைப்போக்குவீர்கள் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திர வழியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

கும்பம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும் சிலர் வாழ்வில் பிரிவுத் துயர் வாட்டும்.

மீனம்: அன்புக் கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்ட தேவதையின் பார்வைக்கு இலக்காகுவீர்கள் குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வான்மீது துவக்குச்சூடு ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

பொலிஸார் நிறுத்தும்படி சைகை காட்டிய போது நிறுத்தாமல் சென்ற வான் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் காயமடைந்தார்.

வானில் கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிஸார் வானை மறிப்பதற்குக் காத்திருந்தனர். வானைக் கண்டதும் பொலிசார் மறிக்கும்படி கையை காட்டினர். ஆனால் வான் சாரதி வானின் வேகத்தை இன்னும் அதிகரித்தார். இதனால் பொலிசார் சுட நேரிட்டது. வானில் கஞ்சா எதுவும் காணப்படவில்லை.

பயங்கரவாதிகள் தான் பொலிஸ் உடையில் இருப்பதாக கருதியே வானை வேகமாக ஓட்டிச் சென்றதாக வான் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்தார். (க)

## "விசுவாசமான சேவை என்றும் மதிப்பைப் பெறும்"

(மானிப்பாய்)

''விசுவாசமான சேவை என்றுமேபாராட்டையும் மதிப்பையும் பெறுகின்றது. ஒருவர் எந்தவித பதவியை வகித்தாலும் அதில் திருப்தியான சேவையைச் செய்தால் எத்தகைய மதிப்பைப் பெறுவார் என்பதற்கு திரு வேலாயுதபிள்ளை ஒரு நல்ல எடுத்துக்காட்டு''

இவ்வாறு ஆனைக்கோட்டை உபதபால் நிலையத்தில் கடந்த 35 வருட காலமாக தபாற்சேவகராகக் கடமையாற்றி இளைப்பாறும் திரு சின்னத்தம்பி வேலாயுதபிள்ளையின் சேவையைப் பாராட்டி ஆனைக்கோட்டை உபதபால் நிலைய ஊழியராலும் ஆனைக்கோட்டைப் பொதுமக்களாலும் இணைந்து நடத்தப்பட்ட பாராட்டுவைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசிய யாழ் தபால் நிலைய பிரதம தபால் அதிபர் திரு எஸ்.ஞானப்பிரகாசம் குறிப்பிட்டார். ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்க நிலைய பாரதி மண்டபத்தில் இளைப்பாறியஉபதபால் அதிபர் திரு எஸ்.திருவிளங்கம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இளைப்பாறிய ஆசிரிய கலாசாலை அதிபர் திரு வி.விஸ்வலிங்கம் பேசுகையில் எந்தவித சேவையாகஇருந்தாலும் அதை முகமலர்ச்சியுடனும் பெருந்தன்மையுடனும் கனிவுடனும் செய்பவர்கள் மக்களின் பெருமதிப்பைப் பெறுகின்றார்களென்றும் திரு வேலாயுதபிள்ளை இவற்றாலேயே மக்களின் நன்மதிப்பைத் தேடிக்கொண்டார் என்றார்.

ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை அதிபர் திரு ந.சிவபாதம் வாழ்த்துமடல் ஒன்றை வாசித்தளித்தார்.

ஆனைக்கோட்டை உபதபால் அதிபர், மானிப்பாய் கிராமோதய சபைத் தலைவர் திரு எஸ். சங்கரப்பிள்ளை, கொக்குவில் கிராமோதய சபைத் தலைவர் திரு த.அந்தோனிப்பிள்ளை ஆசிரியர் திரு க.கதிரேசு உட்பட வேறு பலரும் பேசினர்.

திரு வேலாயுதபிள்ளைக்கு பொற்கிழியொன்றும் வழங்கப் பட்டது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின்வருடாந்தப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 13ம் திகதி புதன்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபரும் சங்கத் தலைவருமான திரு வே.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (கு)

## ரூ. 1 லட்சம் ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டிடம் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவை வட்டுக்கோட்டை எம்.பி கலாநிதி நீலன் திருச்செல்வம் இவ்வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## பரீட்சார்த்த மின் விநியோகம்

(மன்னார்)

பேசாலைப் பகுதிக்கான மின்சார விநியோகத்தை ஆரம்பிக்கும்பொருட்டு பரீட்சார்த்த மின்சார விநியோகம் நடைபெற்றது. இப்பரீட்சார்த்த மின்சார விநியோகம் மாலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற்றது. (க)

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30 மட்டும்
கடைசி வாரம்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
சிவாஜி, லட்சுமி
மனோரமா, தேங்காய்
தியாகம்
வண்ண சித்திரம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 8-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா
தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30 7-00
யாழ்ப்பாணம்)
EXIT THE DRAGoN
ENTER THE TIGER
From 13 th
THE EMPIRE STRIKES BACK
வருகிறது
மூன்றும் பிறை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
துள்ளிசைப் பிரியர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
HAIR
DONT MISS THIS MUSICAL BONANZA-TOP BANDS
14 முதல் ஜெய்சங்ர் நடித்த
வாயாடி
விரைவில் வருகிறது
ஆனந்த ராகம்

றீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-45 7-15 P. M.




இன்னும்
13 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....
சனும் சூரி...
நடிக்கும்
"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"
GIRL FROM INDIA
TECHNICOLOR
இனிய நான்கு ஹிந்திப் பாடல்கள் உங்களை மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள் மட்டும்



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இளம் கலைஞர் வளர்ச்சி நிதிக்காக ஷோபா கிரியேஷன்ஸ் நடாத்திய 'தேன் சிந்தும் மலர்' நாடக இன்னிசைக் கதம்ப நிகழ்ச்சியில் சிறப்பு நிகழ்ச்சியாக நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றம் வழங்கிய இலங்கை வேந்தன் குழுவினரின் சட்டமாணவர்கள் பங்கு பற்றிய 'தூக்கு மேடை' சரித்திர நாடகத்தில் ஒரு காட்சியைப் படத்தில் காண்க.

# 'கல்லூரியுடன் வாழ்க்கையை இணைத்த அதிபர்"



## ஓய்வுபெறும் மகளிர் கல்லூரி அதிபருக்குப் பாராட்டு

(அரியாலை)

''கல்லூரியோடு தனது வாழ்க்கையை இணைத்து கல்லூரியின் முன்னேற்றத்துக்காக உழைத்து, சேவையிலிருந்து இளைப்பாறும் திருமதி கி. எ. ச. செல்லையாவின் சேவை என்றும் மறக்கமுடியாததாகும்'' என்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் அதிபராகஇருந்து இளைப்பாறும் திருமதி செல்லையாவின் சேவை நலத்தைப்பாராட்டிக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் நடாத்திய சேவைநலம் பாராட்டு விழாவில் அபிவிருத்திச் சங்க உபதலைவர் சட்டத்தரணி எம். பரராஜசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கொழும்பு திருமண்டலப் பேராயர் அதிவணக்கத்துக்குரிய சுவீதின் பெர்ஞண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டுவிழாவில் 'சட்டத்தரணி எம். பரராஜசிங்கம் தொடர்ந்து பேசுகையில், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மாணவியாகவும் ஆசிரியையாகவும், உபஅதிபராகவும், 22 ஆண்டுகள் அதிபராகவும் பணியாற்றிய திருமதி செல்லையாவின் சேவை இக்கல்லூரியின் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப்பெறும். திருமதி செல்லையா அதிபராகப் பதவியேற்ற காலத்தில் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்துக்கொண்டிருந்தது. அக்காலகட்டத்தில் இப்பாடசாலையைத் தனித்தியங்கும் பாடசாலையாக நடத்தும்பொறுப்பைஏற்று இன்றுவரைநடாத்தி புதிய சாதனையை நிலைநாட்டிய ஒரு வீராங்கனையாகச் சேவையிலிருந்து இளைப்பாறுகிறார். இவரின் காலத்தில் இக்கல்லூரி எத்தனையோ புதிய கட்டிடங்களையும், மண்டபங்களையும் கொண்டதாக மாறியுள்ளது. மாணவிகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து மேம்பட்டு வாழ வழிவகுத்த அம்மையார் இக்கல்லூரியை இலங்கையின் தலைசிறந்த கல்லூரிகளிலொன்றுக உயர்த்தியுள்ளார். இவர் இக்கல்லூரியில் ஆற்றியசேவை காலம் கல்லூரியின் பொற்காலமாகும்'' என்றுகுறிப்பிட்டார்.

கல்லூரி முகாமையாளரும், இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபருமான திரு. ஜே. எம். சபாரத்தினம் பேசுகையில், திருமதி செல்லையா அதிபராகப் பதவியேற்ற காலத்தில் கல்லூரியில் சேவையாற்றிய ஆசிரியைகளுக்குச் சம்பளமே கொடுக்க முடியாத கஷ்டமான காலமாக இருந்தது. ஆனுல் அதே அதிபர் தமது சேவைக்காலத்தில் இக் கல்லூரியின் வளவிலே முப்பது லட்சம் ரூபா பெறுதியான கட்டிடங்களையும், விஞ்ஞான கூடத்தையும், சிறந்த நூல் நிலையத்தையும், அழகான வகுப்பறைகளையும் கட்டியுள்ளார். இவரது இவரதுசேவை கல்லூரியின் சரித்திரத்தில் இடம் பெறும்'' என்றூர்.

யாழ். டரி. கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன் கல்லூரியின் பழையமாணவிகள் சங்கப் பிரதிநிதி திரு. எம். அரியநாயகம், திருமதி ரி. இராசரத்தினம், திருமதி கே. இராசசிங்கம் ஆகியோர் பழைய அதிபரின் சேவையை பாராட்டியும், புதிய அதிபரான திருமதி ப. ஜெயவீரசிங்கத்தை வரவேற்று வாழ்தியும் பேசினுர்கள். (அ)

## பிரதேச சபைத் தலைவராகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவராக மீண்டும் திரு என். சுப்பிரமணியம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பிரதேச சபையின் தலைவர் தெரிவு உதவி அரசாங்க அதிபர் கே.சுப்பிரமணியம் தலைமையில் கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. திரு சுப்பிரமணியம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி கிராம சேவையாளர் பிரிவின் செயலாளரும், பரந்தன் தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவருமாவார்.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
முத்துராமன்—தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

ஹான் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- பத்மினி-விஜயா
ஜெமினி-சாவித்திரி
சரஸ்வதிசபதம்
(ஈஸ்ட்மன்ட் கலர்)
12-7-83 முதல்
பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்

## திருகோணமலையில்

# பொலிஸ் ஜீப்புக்குத் தீ! காவலாளி அணைத்தார்!!

(திருகோணமலை நிருபர் வி. வி. சுந்தரம்)

நேற்று அதிகாலை 3 மணியளவில் உவர்மலை என்ற இடத்தில் பொலிஸ் ஜீப்புக்கு திவைக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

உவர்மலையில் நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான 'சேர்க்குவிற்பங்களா' ஒன்று உள்ளது.

அந்த பங்காவளவில் வேறு சில அரசாங்க வாகனங்களுடன் இந்த ஜீப்பும் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பொலிஸ் ஜீப்பைப் பாவித்து வருபவர் அட்டன் பகுதி உதவிப் பொலிஸ் அதிபர் ஜி. டி.ஆரியசேஞ. அவர் திருகோணமலையில் இப்போது விசேட கடமையில் ஈடுபட்டுள்ளார்.

அவர் அந்த ஜீப்பை நிறுத்திவிட்டு நித்திரையில் இருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

பங்களா காவலாளி எச். எம். குணசிங்கா ஜீப்பின் இடதுபக்க முன் டயருக்குப் பக்கத்தில் தீப்பற்றிஎரிவதைக் கண்டு உடனடியாக அதனை அணைத்தார் உதவிக்குபொலிஸ் பகுதியினர் நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டனர்.

பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடாத்திஞர்கள். இருவர் மதிலுக்கு மேலால் குதித்து ஓடுவதைக் கண்டதாக காவலாளி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அரச திணைக்கள வாகனங்கள் எல்லாம் இப்போது கச்சேரி வளவினுள் நிறுத்திவைக்கப் படுகிறது.

## திருமலை அகதிகளுக்கு நிதி உதவி

(அரியாலை)

''வன் செயலால் பாதிக்கப்பட்டு அவதிக்குள்ளாகியிருக்கும் திருகோணமலை மக்களின் புனர்வாழ்வுக்குக்கைகொடுத்துதவ ரூபா ஐயாயிரத்தை அனுப்பிவைப்பதென்று யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் தீர்மானித்தது.

திரு. ஜே. ஜி.அரசரத்தினம் தலைமையில் யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் பொது நிர்வாக சபையில் தேசிய கிறிஸ்தவ சங்கத்திஞல் அனுப்பி வைக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபா ஒருலட்சம் செலவிட்டு 50 அலுமாரிகளை உடன் செய்து யாழ். பொதுசன நூல்நிலையத்துக்கு வழங்குவதென்றும், இதுவரை சங்கத்திஞல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா முப்பத்தேழாயிரம் பெறுமதியானபுத்தகங்களை யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கையளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# குருநகர் ராணுவ முகாமில் பன்னீர்ச்செல்வம்

(வவனியா)

வவனியாவில் கைதான இரு இளைஞர்களில் ஒருவரான பன்னீர்ச் செல்வம் வவனியாவிலிருந்து குருநகர் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். மற்றொரு இளைஞரான சிறிதரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் இருவரும் நள்ளிரவில் வவனியா பஸ் நிலையத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்கள்.

கல்முனையைச் சேர்ந்த இவர்கள் மன்னாருக்குச் செல்வதற்காக வவனியாவில் இறங்கி நின்றபோதே கைதானார்கள். இவர்களிடம் மாநில மகாநாடு சம்பந்தமான சில துண்டுப்பிரசுரங்கள்இருந்தன.

## ஆஸ்பத்திரியில் வி. என்.

(மட்டுவில்)

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சுகவீனம் காரணமாக சாவகச்சேரியில் தனியார் மருத்துவ மனையொன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். திரு. நவரத்தினத்துக்கு பூரண ஓய்வு தேவை என்பதால் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

## காட்டுப்புலம் மக்களின் நீண்டகாலக் கனவு இன்றுநனவாகிறது

(யாழ்ப்பாணம்)

தொழுநோயால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் மக்களின் நீண்டகாலத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக சனசமூக நிலையம், சிறுவர் பாடசாலை, சுகாதார சிகிச்சை நிலையம் என்பனவற்றை உள்ளடக்கிய 75,000 ரூபா பெறுமதியான புதிய கட்டிடம் இன்று காலை முன்னாள் லயன்ஸ் ஆளுநர் டாக்டர் அரியம் நல்லையாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வட்டு. லயன்ஸ் கழகத்தினரால் நோருட் ஸ்தாபனத்தின் உதவியுடன் வட்டு. லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இ. விஜயரத்தினத்தின் முயற்சியால் இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

இக்கட்டிடத்தைத் திறந்து வைக்கும் ஆளுநர் வட்டுத். தொண்டேயம் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல்லையும் இன்று நாட்டி வைப்பார். (து)

## கிரிக்கெட் சென். பற்றிக்ஸ் 176—5

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான, இறுதிக் கிரிக்கெட் போட்டியில், நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது சென். பற்றிக்ஸ் கல்லூரி 5 விக்கெட் நஷ்டத்துக்கு 176 ஓட்டங்களைப் பெற்றது.

சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் துடுப்படி வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போதும், எதிர்பாராத் விதமாக ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்டம் இன்று காலை தொடர்ந்து, சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (வி)

## முல்லைத்தீவு பஸ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். இருவரது கையில் துப்பாக்கியும், ஒருவரது கையில் கத்தியும் இருந்தது.

ஐந்து பிரயாணிகளையும், சாரதியையும், கண்டக்டரையும் பஸ்ஸை விட்டு இறக்கினார்கள். அந்த இடத்தில் வைத்தே, பஸ்ஸுக்குத் தீ வைத்தார்கள். 23 ஸ்ரீ 8220 இலக்கமுடைய இந்த பஸ் முற்றாக எரிந்து விட்டது.

சாரதி பொன்னையா யோகராசா பொலிஸில் புகார் செய்தார்.

ஸ்தலத்துக்கு வவனியா எஸ். பி. திரு. ஹேரத்தும், ஏ. எஸ். பி. சிவேந்திரனும் சென்று பார்வையிட்டனர்.

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6-02 | கல்வி நிகழ்ச்சி (விலங்கியல்) |
| 6-30 | சிறுவர் நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-30 | கலையரங்கம் |
| 8-15 | செய்தி மஞ்சரி (சிங்களம்) |
| 8-30 | குறுந்திரைப்படம் |
| 9-30 | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 9-45 | றமழான் விசேட நிகழ்ச்சி. |

## உதவி அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது:- ''நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆயுதமேந்தியவர்களால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இதனால் அங்கு உடனடியாக வழமையான வேலைகளைக் கவனிப்பது சற்றுச் சிரமமான காரியமாகும். ஆயினும்பொது மக்களின் நலனை முன்னிட்டு சில பிரதான சேவைகளை அவர்களுக்கு வழங்கும்வகையில் தற்காலிகமாக அவ் அலுவலக வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

'ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் தலா பத்தாயிரம் உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன. மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு இப்பிரிவுகள் அம்முத்திரைகளை வழங்குகின்றன. எனவே உதவி அரச அதிபர் அலுவலகமொன்று மூடப்பட்டால் பல ஆயிரக்கணக்கானவர்கள் பட்டினி இருக்க வேண்டி ஏற்படும்.

'சீனி, மா போன்ற அத்தியாவசிய உப உணவுப்பண்டங்களுக்கான விநியோகக் கட்டளைகளையும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகமே வழங்குகிறது. எனவே இந்த அலுவலகம் மூடப்படுவதால் இப்பொருட்களின் விநியோகம் பாதிப்படையும்.

''இவைதவிர நற்சான்றிதழ்கள், சந்தேகநபர்களைப் பிணை எடுப்பதற்கான சான்றிதழ்கள், கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கான தஸ்தாவேஜுக்கள் போன்றவற்றையும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களே வழங்குகின்றன. ஆகையினால் இந்த அலுவலகங்களின் செயல்பாடுகளில் குறுக்கிடுவது கணிசமான அளவு மக்களை பலத்த சிரமத்துக்குள்ளாக்கும். (கி)

## வட்டமேசை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அழைக்கப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள்பிரிவினைகோருவதை தடை செய்வதற்கான நகல் சட்டமூலம் ஒன்று விரைவில் தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (சூ)

## உப தபால் நிலையம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2-ம் திகதி இந்த உப தபால் நிலையத்தில் இரு இளைஞர்களால் துப்பாக்கி முனையில் ரொக்கப்பணமும், பெறுமதியான முத்திரையும் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

இரு இளம்பெண்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். இவர்களே நேற்று 'பைல்கள்' எரிவதாகப் பொலிசில் புகார் செய்தார்களாம். (மா)

## கடற்படை வீரர்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சூட்படுத்தப்பட்டுள்ளது. சுன்னாகம் மின்சார நிலையம் கடற்படை வீரர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சம்பவதினம் ஐந்து கடற்படைவீரர்கள்மின்சாரநிலையத்தின் பாதுகாப்பிலீடுபட்டிருந்தனர். இரவு 12மணிக்குப்பின்னர் கடமைநேரம் முடிந்து ஐவரும் மின்சாரநிலையவளவுக்குள் இருக்கும்தங்கும் விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அதே நேரம் சுமார் 15 கடற்படை வீரர் விடுதிக்கு முன்னால் இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

கடமை முடிந்து திரும்பிய ஐந்து கடற்படை வீரருள் ஒருவரான நல்லப்பெருமா என்பவர் வழக்கமாக வரும் பாதையால் வராமல், விடுதிக் கட்டிடத்தின் சுவரோரமாக வந்து கொண்டிருந்தாராம். மற்றைய நான்கு வீரரும் வழக்கமான பாதையால் வந்து கொண்டிருந்தனராம்.

சுவரோரமாக வந்துகொண்டிருந்த வீரரின் திசையைநோக்கி ஏதோ வெடிச்சத்தம் கேட்டதாம். அப்பொழுது மின்சார வெளிச்சம் அணைந்ததாம். இளைப்பாறிக்கொண்டிருந்த வீரர்கள் வெடிச்சத்தம் கேட்டதாகத் தெரிவிக்கப்படும் பக்கமாக ஒரு உருவம் அசைந்து வருவதைக் கண்டு சந்தேகத்தின்பேரில் றைபிள்களாலும், 'ஷொட் கண்' களாலும்சுமார் 25 தடவை சுட்டனர். இந்த வெடிச்சத்தம் அண்மையில் உள்ள சுன்னாகம் பொலிஸ்நிலையத்துக்குக் ஈகட்டதும், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

தனிமையில் வந்துகொண்டிருந்த குறிப்பிட்ட கடற்படை வீரர் அந்த இடத்திலேயே இறந்து கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் சடலம் அதிகாலை 3-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் விசாரணைக்காக வைக்கப்பட்டது.

யாழ். நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா இறந்தவரின் சடலத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு, பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராஜா, காரைநகர் கடற்படை முகாம் பொறுப்பதிகாரி ஈ. சி. பெர்னாந்து, உதவி லெப்டினன்ட் எஸ். திஸநாயக்கா ஆகியோரும் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜலிங்கம், சார்ஜன்ட் எஸ். துரைசிங்கம், கான்ஸ்டபிள்கள் கே. எஸ். நாதன், இ. கந்தசாமி ஆகியோர் விசாரணை செய்தனர்.

சட்டவைத்திய அதிகாரி எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனைசெய்தார். றைபிளால் சுட்டதால் தலையில் காயம் ஏற்பட்டு இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் கிடந்த இடத்திலிருந்து றைபிள் ரவைகள், உடைந்த பித்தளைத் துண்டுகள் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டன.

'இறந்தவரின் சடலம் காரைநகர் கடற்படை முகாமுக்கு அஞ்சலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, விமானமூலம் சொந்த இடமான காலியிலுள்ள அக்மனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (மா)

## மரண அறிவித்தல்

### A. S. ஜேம்ஸ்

இளவாலை புனித என்றியரசர் கல்லூரியின் இளைப்பாறிய தலைமையாசிரியருமாகிய A. S. ஜேம்ஸ் அவர்கள் 11-07-83 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற றெஜீனா அவர்களின் அன்புக் கணவரும், Dr. J. J. M. மனோகரன் (அமெரிக்கா), மனோரஞ்சிதம் மனோகரி (லண்டன்), மனோகரராஜ் (Ceylon Cold Stores), சயந்தகுமாரன் (லண்டன்), வசந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், T. P. ஜேசுரட்ணம் (I.D.B., அச்சுவேலி), மரியதாஸ் (லண்டன்), காந்தி (அமெரிக்கா), சாந்தி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

''ஜமுனா காடின்'',
இளவாலை.

7948

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை பிரான்சீஸ்

பருத்தித்துறை பிரபல வர்த்தகரும், பேர்னதேத் ரான்ஸ்போட், பருத்தித்துறை இன்டஸ்ரியல் வேக்ஸ் உரிமையாளரும், காலஞ்சென்ற பேர்னதேத்தம்மாவின் அன்புக் கணருவருமாகிய மரியாம்பிள்ளை பிரான்சீஸ் 10-7-83ல் காலமானார். இவர் வின்சன் டி போல், அலோசியஸ், மேரிறோஸ், அல்போன்ஸ், எட்வேட், அகஸ்தூஸ் நெல்சன், மரியசுசீலா, மறிஸ்ரெல்லா ஆகியோரின் அன்புத்தந்தையும், பிலோமினா, இருதயநாதர் (கணக்காளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), யோசேப்பீன், தேவராசா (பெருந்தெருக்கள் திணைக்களம், வவுனியா), அன்னக்கிறேஸ், அன்னம்மாள், இமாகுலேற்று ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் புனித தோமையார் சேமக்காலைக்கு இன்று (12-7-1983) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

7937

## யாழ். நகர் உதவி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூச்சாடியொன்றை நொறுக்கியபோது, 'அது வீட்டுக்காரருடையது' என்று ஒரு உத்தியோகத்தர் சொன்னபோது, மற்றப் பூச்சாடிகளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்களாம்.

நேற்றையதினம் உதவி அரசாங்க அதிபர் லீவில் சென்றிருந்தார்.

இளைஞர்கள் வெளியேறுவதற்குமுன்னர் கதவுகளைச் சாத்திவிட்டுஅலுவலக முன் பக்கத்தில் கையெழுத்திலான அறிவித்தலொன்றை தொங்கவிட்டுச் சென்றார்கள்.

''டாக்டர் தர்மலிங்கத்தையும், கோவை மகேசனையும் விடுதலை செய்யும்வரை வேலை செய்யக்கூடாது'' — தமிழ்ஈழ விடுதலை இராணுவம்'' என்று அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது. (மா)

## தசாக அழைப்பு

சாலஞ்சென்ற எமது தந்தையார் சிவஸ்ரீ

**கு. இராமநாதக் குருக்கள்** அவர்களின்

| | | | |
|---|---|---|---|
| தசாகம் | 13-7-83 | சபீண்டிசரணம் | 15-7-83 |
| எகோதிஸ்டம், மாசிகம் | 14-7-83 | கிரகஎக்ஞம், சமாராதனை | 16-7-83 |

முதலிய கிரிகைகள் அவரின் இல்லத்தில் மேற்குறித்த தினங்களில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் குடும்ப சமேதராக சமூகம் தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வேண்டி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
**அன்னாரின் குடும்பத்தினர்**

கந்தசாமி கோவிலடி,
இணுவில்

7952

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு விதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.